DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.75/2025**
Prosecution Witness P.W.8

| | |
|---|---|
| Name : **திருமதி.திருமால்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

எதிரிகள் ஆஜர்
**நாள்: 12.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

<u>முதல் விசாரணை</u>

எனது வீடு கண்டமனூர், வடக்கு தெரு, ஆண்டிப்பட்டி தாலுகாவில் அமைந்துள்ளது. சம்பவம் நடந்த கட்டிடம் எங்களுக்கு சொந்தமானது, அது காலியிடம் கட்டிடம் எதுவும் கிடையாது. வேலி போடாமல் நாங்கள் சும்மா வைத்து இருந்தோம். அது சத்யா காலனியில் அமைந்துள்ளது அது தில்லை காளியம்மன் கோவிலுக்கு பக்கத்தில் அமைந்துள்ளது. போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள். எனக்கு வழக்கு தொடர்பாக எந்த விபரம் தெரியாது. அங்கு கட்டிடம் கிடையாது, காலி இடமாகத்தான் இருந்தது.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. )**

<u>அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்த இடமான தில்லை காளியம்மன் கோவில் அருகில் உள்ள எனது கணவர் ராஜாங்கம் பெயரில் உள்ள ஒரு பாழடைந்த கட்டிடம் என்றால் சரியல்ல அந்த இடத்தில் பொதுவாக அனைவரும் உட்கார்ந்து மது அருந்துவார்கள் என்றால் நான் அந்த இடத்திற்கே போகமாட்டேன், எனவே அது

பற்றிய விபரங்கள் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் சம்பவம் நடைபெற்ற விபரத்தை கேள்விப்பட்டு நான் சென்றேன் என்றும், அதேபோல் எதிரிகள் தான் சஞ்சீவ் குமார் இறந்ததற்கு காரணம் என ஊரில் அனைவரும் பேசிக் கொண்டார்கள் என்றும், இது சம்பந்தமான விபரங்களை நான் கேள்விப்பட்டேன் என்றும், போலீசார் என்னை விசாரிக்கும் போது எனக்கு தெரிந்த விவரங்களை சொன்னேன் என்றால் சரியல்ல. தற்போது அந்த இடத்தில் கட்டிடமே இல்லை என்று எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.12 17:19:02 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.